**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**

**நான்காம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2017/2018 (ஆகஸ்ட் 2020)**

# DTS 4143 Theoretical Literatures on Drama & Theatre

**நேரம் : 03 மணித்தியாலங்கள்**

**பகுதி – I இல் இருந்து எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் பகுதி – II இல் இருந்து மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

---

## பகுதி – I

01. (1) நாடக இலக்கிய எண்ணக்கருக்கள் ஆற்றுகையை மையப்படுத்தி உருவாகும் முறை பற்றி ஆராய்க.

(09 புள்ளிகள்)

(2) கோட்பாட்டை மையப்படுத்தி ஆற்றுகை உருவாகும் நிலை யாது?

(05 புள்ளிகள்)

02. (1) நாடகம், அரங்கு, ஆற்றுகை எனும் எண்ணக்கருவை விளக்குக.

(07 புள்ளிகள்)

(2) ஈழத்து அரங்கச் செயற்பாடுகளில் ஆற்றுகையின் முன்னிலைப்படுத்துகை எவ்வாறான போக்கில் உள்ளது? சுருக்கமாக மதிப்பிடுக.

(07 புள்ளிகள்)

03. (1) ஆற்றுகைக் கலை முன்னெடுப்பில் எறிக்காபிஷரின் (Erika Fischer) நிலை மாற்று (Transformer Power) நுட்பமுறை யாது?

(05 புள்ளிகள்)

(2) புதிய அழகியல்முறை அரங்கச் செயற்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கம் யாது? சுருக்க விளக்கம் தருக.

(09 புள்ளிகள்)

## பகுதி – II

04. "அரிஸ்ரோட்டில் அவலச்சுவை, மகிழ்நெறி, சற்றயர் நாடக வகைக்கான தத்துவங்களை உருவாக்குவதற்கான உந்துசக்தியாக அமைந்தவை அக்கால நாடக ஆற்றுகைகளும், பனுவல்களுமாகும்" ஆராய்க.

(24 புள்ளிகள்)

05. ஆற்றுகையாளருக்கு இருக்க வேண்டிய ஆற்றக்கூடிய உடம்பின் (Performative Body) முக்கியத்துவம் பற்றிக் குறிப்பிட்டு, நவீன, பாரம்பரிய அரங்குகளின் எடுத்துக்காட்டுக்களுடன் நிறுவுக.

(24 புள்ளிகள்)

06. "அரங்கியல் சிந்தனைகள் கோட்பாடாக உருவாவதற்கு பண்பாட்டு வெளியிலுள்ள சடங்குசார் நிகழ்வுகளிலும் நாடக ஆற்றுகைகளிலும் ஈடுபட்டு செயற்படுத்துவது அவசியம்" இக்கூற்றினை உமது பங்குகொள் அனுபவத்துடன் தெளிவுபடுத்துக.

(24 புள்ளிகள்)

07. நாடக எழுத்துப்பனுவலின் கொள்கைக்கும் றிச்சட் செக்னரின் ஆற்றுகை மையக்கொள்கைக்கும் இடையிலான வேறுபாட்டை மதிப்பிடுக.

(24 புள்ளிகள்)

*****